செய்தி வெளியீடு எண் :663 நாள் : 06.04.2023

# செய்தி வெளியீடு

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், இடையகோட்டை கிராமத்தில் நங்காஞ்சியாறு நீர்த்தேக்கத்திலிருந்து திண்டுக்கல் மற்றும் கரூர் மாவட்டங்களிலுள்ள பாசன நிலங்கள் பயன்பெறும் வகையில், வலதுபுற தாழ்மட்ட கால்வாய் மற்றும் இடது புற தாழ்மட்ட கால்வாய்க்கு 10.04.2023 முதல் 19.05.2023 வரை 40 நாட்களுக்கும், மேலும், வலதுபுற உயர்மட்ட கால்வாய் மற்றும் இடது புற உயர்மட்ட கால்வாய்க்கு 10.04.2023 முதல் 09.05.2023 வரை 30 நாட்களுக்கும் பாசன காலத்திற்கு உரிய இடைவெளியில், 177.67 மில்லியன் கன அடிக்கு மிகாமல் தண்ணீர் திறந்துவிட அரசு ஆணையிட்டுள்ளது.

இதனால் திண்டுக்கல் மாவட்டத்தில் 2615 ஏக்கரும் மற்றும் கரூர் மாவட்டத்தில் 3635 ஏக்கரும் ஆக மொத்தம் 6250 ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்**
**(நீர்வளத்துறை)**

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in